BOOK-PO

A CHECK-LIST

New Titles in Social Sciences & the Humanities

Manager
Ajanta
83, Fir
Salem-6
Tamilna

ok Centre
t Agraharam
6 001



பிராதஸ்மரணம்

அதவா

பாரத பக்தி ஸ்தோத்ரம்

கராக்ரே வஸதே லக்ஷ்மீ: கரமத்யே ஸரஸ்வதீ
கரமூலே து கோவிந்த: ப்ரபாதே கர தர்சனம். (1)

ஸமுத்ர வஸனே தேவி பர்வதஸ்தன மண்டலே
விஷ்ணுபத்னி நமஸ்துப்யம் பாதஸ்பர்சம் க்ஷமஸ்வமே (2)

ப்ரம்மா முராரிஸ்த்ரிபுராந்தகாரீ
பானு: சசீ பூமி ஸுதோ புதஸ்ச
குருஸ்ச சுக்ர: சனி ராஹுகேதவ:
குர்வந்து ஸர்வே மமஸுப்ரபாதம் (3)

ஸனத்குமார: ஸனக: ஸனந்தன:
ஸனாதனோப்யாஸுரி பிங்கலௌ ச
ஸப்த ஸ்வரா: ஸப்த ரஸாதலானி
குர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம். (4)

ஸப்தார்ணவா: ஸப்த குலாசலாஸ்ச
ஸப்தர்ஷயோ த்வீபவனானி ஸப்த
பூராதி க்ருத்வா புவனானி ஸப்த
குர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம். (5)

ப்ருத்வீ ஸகந்தா ஸரஸா ஸ்ததாப:
ஸ்பர்ஸீச வாயுர் ஜ்வலனஞ் ச தேஜ:
நப: ஸ சப்தம் மஹதா ஸஹைவ
குர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம். (6)

மஹேந்த்ரோ [1] மலய: ஸஹ்யோ தேவதாத்மா ஹிமாலய:
த்யேயோ ரைவதகோ விந்த்யோ கிரிஸ்சாரா
வலிஸ்ததா. (7)

கங்கா ஸிந்துஸ் ச காவேரி யமுனு ச ஸரஸ்வதீ
ரேவா[2] மஹாநதீ கோதா ப்ரம்மபுத்ர: புனுதுமாம். (8)

அயோத்யா மதுரா மாயா காசி காஞ்சி அவந்திகா
புரீ த்வாராவதீ சைவ ஸப்தைதா மோக்ஷதாயிகா: (9)

ப்ரயாகம் பாடலீபுத்ரம் விஜயா நகரம் புரீம்[3]
இந்த்ர ப்ரஸ்தம் கயாம் சைவ ப்ரத்யூஷே
ப்ரத்யஹம் ஸ்மரேத். (10)

அருந்தத்[4] யனஸூயா[5] ச ஸாவித்ரீ ஜானகீ ஸதீ[6]
தேஜஸ்வினீ ச பாஞ்சாலீ வந்தனீயா நிரந்தரம் (11)

லக்ஷ்மீரஹல்யா சன்னம்மா[7] மீரா துர்காவதீ[8] ததா
கண்ணகீ[9] ச மஹாஸாத்வீ சாரதா[10] ச நிவேதிதா (12)

வைன்யம் ப்ருதும் ஹைஹயமர்ஜுனம் ச
சாகுந்தலேயம் பரதம் நலம் ச
ராமம் ச யோவை ஸ்மரதி ப்ரபாதே
தஸ்யார்த்த லாபோ விஜயஸ் ச ஹஸ்தே (13)

தத்யங்மனுர் ப்ருகுரஸௌ ஹரிபூர்வசந்த்ரோ[11]
பீஷ்மார்ஜுன-த்ருவ-வஸிஷ்ட சுகாதயஸ்ச
ப்ரஹ்லாத-நாரத-பகீரத-விச்வகர்ம[12]
வால்மீகயோऽத்ர சிரசிந்த்ய சுபாபிதானு: (14)

அச்வத்தாமா பலிர்வ்யாஸோ ஹனுமா(ன்)ஶ்ச விபீஷண:
க்ருப: பரசுராமஸ் ச ஸப்தைதே சிர ஜீவின: (15)

ஸப்தைதான் ஸம்ஸ்மரே ந்நித்யம்
மார்க்கண்டேய மதாஷ்டமம்
ஜீவேத் வர்ஷசதம் ஸாக்ரமபம்ருத்யு விவர்ஜித: (16)

புண்ய ச்லோகோ நலோ ராஜா
புண்யச்லோகோ யுதிஷ்டிர:

புண்யச்லோகோ விதேஹஸ்ச
புண்ய ச்லோகோ ஜனார்தன: (17)

புத்தோ ஜினேந்த்ரோ கோரக்ஷ: 13 சங்கரஸ்ச
பதஞ்சலி: 14

ராமானுஜோऽத சைதன்ய: கபீரோ குருநானக: (18)

ஞானேச்வரஸ் துகாராம: ஸமர்த்தோ மத்வ வல்லபௌ
நரஸிஸ் 15 துலஸீதாஸ: கம்ப:16 ஸாது குலோத்தமா: (19)

நாயன்மா 17 ராழ்வா 18 ராஸ்ச திருவள்ளுவரஸ் ததா
விதரந்து ஸதைவைதே தைவீம்மே குணஸம்பதம் (20)

அகஸ்த்ய:கம்பு கௌண்டின்யௌ
ராஜேந்த்ரஸ் சோல பூஷண

ஸர்வே திக்ஜயின: க்யாதா: சைலேந்த்ரோ
பப்பராவல: [19] (21)

சாணக்யஸ் சந்த்ரகுப்தஸ்ச விக்ரம: சாலிவாஹன:
அசோக: புஷ்யமித்ரஸ்ச [20]காரவேல: [21]ஸுநீதிமான். (22)

ஹுணஜேதா யசோதர்மா ஸமுத்ரோ: குப்த வம்சஜ:
ஸ்ரீகிருஷ்ணதேவராய [22]ஸ்ச ப்ரதாதா ஹர்ஷ வர்தன: (23)

ஸாது: சங்கரதேவ [23] ஸ்ச ததா ஸாயண [24] மாதவௌ
ப்ரதாப: சிவராஜஸ் ச கோவிந்தோ பஸவேச்வர: (24)

ராமக்ருஷ்ணோ தயானந்தோ ரவீந்த்ரோ ராம மோஹன:
ராமதீர்த்தோS ரவிந்தஸ்ச விவேகானந்த உத்யசா: (25)

திலகோ ரமண [25] ஸ்சைவ ஸுதீர் நாராயணோ குரு: [26]
மஹாமணு மாலவீயோ மஹாத்மா காந்திரேவச (26)

கேசவ: ஸங்கநிர்மாதா ஹேடகேவார வம்சஜ:
ஸந்ததம் சிந்தயேதேதான் ஹிந்துபூமி
ஸுதோத்தமான். (27)

அநுக்தாயே பக்தா ஹரிசரணஸம்ஸக்த ஹ்ருதயா
அவிக்ஞாதா வீரா அதிஸமரமுத்வஸ்த ரிபவ:
மஹாத்மான: ஸந்தோ பரதபுவியே ஸந்தி ச பரே
நமஸ்தேப்யோ பூயாதுஷஸி ஸகலேப்ய: ப்ரதி தினம் (28)

ரத்னாகராதௌத பதாம் ஹிமாலய கிரீடினீம்
ப்ரம்மராஜர்ஷி ரத்னாட்யாம் வந்தே பாரதமாதரம் (29)

ப்ராத: ஸ்மரணமேதத் யோ விதித்வா தரத: படேத்
ஸஸம்யக் தர்மநிஷ்ட: ஸ்யாத் ஸம்ஸ்ம்ருதா
அகண்ட பாரத: (30)

பாரத் மாதா கீ ஜய்.

சில பெயர்களின் விளக்கம்

1. பாரதத்தின் முக்கியமான மலைகள்—மஹேந்த்ர (ஒரிஸா), மலய (தென்பாரதம்), ஸஹ்யாத்ரி (மேற்குத் தொடர்ச்சி மலை), ஹிமாலய, ரைவதக (காடியாவாட்—கிர்னுர் என்ற பெயரில் பிரசித்தி பெற்றது), விந்த்யாசலம், அராவலி (ராஜஸ்தான்).

2. ரேவா—நர்மதா.

3. புரீ—ஜகன்னாதபுரீ.

4. அருந்ததி—வசிஷ்டரின் மனைவி. உதாரணமான பதிவிரதை.

5. அனசூயா—அத்ரி முனிவரின் மனைவி, சிறந்த பதிவிரதை.

6. ஸதீ—தக்ஷனின் மகள். சிவபெருமானின் ஒரு பாகத்தாள்.

7. சன்னம்மா—கர்நாடகத்தின் வீரமங்கை.

8. துர்க்காவதி — முகலாயர்களின் படையெடுப்பை எதிர்த்துத் தடுத்த விந்தியப் பிரதேச கடமண்டலாவின் ராணி.

9. கண்ணகி— தமிழ்நாட்டின் புகழ்மிக்க பதிவிரதை.

10. சாரதா—பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் தர்மபத்தினி.

11. ஹரிபூர்வசந்த்ரோ—அரிச்சந்திர மன்னன்.

12. விச்வகர்மா—கலைகள் எல்லாவற்றிற்கும், சிற்பக் கலைக்கும் முதல் குரு.

13. கோரக்ஷ— கோரக்நாத்—'நாதபந்த்'தின் ஸ்தாபகர்.

14. பதஞ்சலி-சிறந்த இலக்கண பாஷ்யம் எழுதியவர். புஷ்யமித்ரரின் வழிகாட்டி; யோக சூத்திரத்தை இயற்றி யவர்.

15. நரஸிமேதா-குஜராத்தின் மாபெரும் வைஷ்ணவப் பெரியார்.

16. கம்பர்-தமிழ்மொழியின் வால்மீகி.

17. நாயன்மார் - இடைக்காலத்தில் தென்பாகத்தில் தோன்றிய 63 சைவப் பெரியார்கள்.

18. ஆழ்வார்-இடைக்காலத்தில் தென்பாகத்தில் தோன்றிய 12 வைணவப் பெரியார்கள்.

19. அகஸ்தியர், கம்பு, கௌண்டின்யர், ராஜேந்திர சோழர், சைலேந்த்ர, பாப்பாராவல்—பாரதீயப் பண்பாட் டின் கொடியை அயல்நாடுகளிலும் நாட்டியவர்கள்.

20. புஷ்யமித்ர-[illegible] தடுத்த ஹிந்துப்பேரரசர், சுங்கவமிசத்தை நிறுவியர்.

21. காரவேலா-கலிங்கத்துச் சக்ரவர்த்தி.

22. ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் - விஜயநகரப் பேரரசின்-மாபெரும் சாம்ராட்.

23. சங்கரதேவ்-அஸ்ஸாம் மாகாணத்தின் வைஷ்ணவ பக்தர்.

24. சாயணாச்சாரியார்-வேதப் பொருளை விளக்கியவர்.

25. ரமண மஹரிஷி-தமிழ்நாட்டில் அண்மையில் தோன்றி இறையனுபவம் பெற்ற தலை சிறந்த மகாத்மா.

26. நாராயணகுரு-கேரளத்தின் புகழ்வாய்ந்த சமூகத் தொண்டர், அடியார்.

ஸ்ரீ

பிரார்த்தனை

(சந்தி விதிகளின்படி உச்சரிப்பதற்காக எழுதப்பட்டது)

நமஸ்தே ஸதா வத்ஸலே மாத்ருபூமே
த்வயா ஹிந்துபூமே ஸுக(ம்) வ்வர்த்திதோஹம்
மஹா மங்கலே புண்ய பூமே த்வதர்த்தே
பதத்வேஷ காயோ நமஸ்தே நமஸ்தே
ப்ரபோ சக்திமன் ஹிந்துராஷ்ட்ராங்கபூதா
இமே ஸாதரந் த்வான் நமாமோ வயம்
த்வதீயாய கார்யாய பத்தா கடீயம்
சுபாமாசிஷந் தேஹி தத்பூர்த்தயே
அஜய்யாஞ்ச விஷ்வஸ்ய தேஹீச சக்திம்

ஸுசீலஞ் ஜகத்யேன நம்ரம் பவேத்
ஷ்ருதஞ் சைவ யத் கண்டகாகீர்ணமார்கம்
ஸ்வயம் ஸ்வீக்ருதன் நஸ்ஸுகங் காரயேத்
ஸமுத்கர்ஷ நிஷ்ரேய ஸஸ்யைகமுக்ரம்
பரம் ஸாதனன் நாம வீரவ்ரதம்
ததந்த ஸ்புரத்வக்ஷயா த்யேய நிஷ்டா
ஹ்ருதந்த: ப்ரஜாகர்து தீவ்ராணிசம்
விஜேத்ரீ ச நஸ் ஸம்ஹதா கார்ய சக்திர்
விதாயாஸ்ய தர்மஸ்ய ஸம்ரக்ஷணம்
பர(ம்)வ் வைபவன் நேதுமேதத் ஸ்வராஷ்ட்ரம்
ஸமர்த்தா பவத்வாசிஷா தே ப்ருசம்.

பாரத் மாதா கி ஜய்!

பொழிப்புரையும் பதவுரையும்

வத்ஸலே மாத்ருபூமே! = மைந்தர்களிடத்து அன்பு காட்டும் தாய் நாடே! தே! = உனக்கு ஸதா = எப்பொழுதும் நம: = வணக்கம். ஹிந்துபூமே = ஹிந்து பூமியே த்வயா = உன்னால் அஹம் = நான் ஸுகம் வர்த்தித: = சுகமாக வளர்க்கப்படுகிறேன் (வர்த்திதோஹம் = வர்த்தித + அஹம்) மஹா மங்கலே புண்யபூமே = மிக்க மங்களமயமான புண்ணியபூமியே த்வதர்த்தே (த்வத் + அர்த்தே) = உன் பொருட்டு ஏஷ: = இந்த காய: = உடல் பதது: = வீழட்டும். நமஸ்தே நமஸ்தே = உன்னைப் பன்முறை வணங்குகின்றேன். (பதத்வேஷ = பதது + ஏஷ:)

சக்திமன் ப்ரபோ = சர்வசக்தி வாய்ந்த இறைவனே ஹிந்து ராஷ்ட்ராங்க பூதா: (ஹிந்து ராஷ்ட்ர + அங்க பூதா:) = ஹிந்து ராஷ்ட்ரத்தின் உறுப்புகளாக உள்ள இமே = இந்த

வயம் = நாங்கள் த்வாம் = உன்னை ஸாதரம்=பணிவுடன் நமாம:=வணங்குகின்றோம்.

த்வதீயாய = உனது (உனது தொடர்புள்ள) கார்யாய= பணிக்காக இயம்=இந்த கடீ=கச்சையை (கடீயம்=கடீ+ இயம்) பத்தா =கட்டியுள்ளோம். தத்பூர்த்தயே=அது நிறை வேற சுபாம் ஆசிஷம் = நல்லாசிகளை தேஹி=அருள்வாயாக.

ஈச=இறைவனே! (தேஹீச=தேஹி+ஈச) விச்வஸ்ய =உலகத்தால் அஜய்யாம் = எதை வெல்லுவது இயலாதோ (அத்தகைய) சக்திம் = சக்தியை தேஹி = அளிப்பாயாக.

யேன = எதனால் ஜகத் = உலகமானது நம்ரம் = வணங்கி நிற்பதாக பவேத்=ஆகுமோ (அத்தகைய) ஸுசீலம் = நல் லொழுக்கத்தையும் யத் = எது ஸ்வயம்ஸ்வீக்ருதம் = ஸ்வயமாக தூண்டுதலால் ஏற்றெடுக்கப்பட்ட ந: = எங்களது கண்டகா

கீர்ண மார்கம்=முள் நிறைந்த பாதையை [கண்டக(முள்) + ஆகீர்ண (நிறைந்த)] ஸுகம்=கடப்பதற்கு எளிதாக காரயேத்=ஆக்குமோ (அத்தகைய) ச்ருதம்=ஞானத்தையும் சைவ (ச+ஏவ)=கூட. தேஹி=அளிப்பாயாக.

ஸமுத்கர்ஷ நி: ஷ்ரேயஸஸ்ய=இம்மைக்கும் மறுமைக்கும் (ஸமுத்கர்ஷ=இம்மையிலும் மறுமையிலும் பெருவாழ்வு நிஷ்ரேயஸ்=மோட்சம்) ஏகம் பரம் உக்ரம் ஸாதனம்=மிக உயர்ந்த தீவிரமான ஒரே வழியானது வீரவ்ரதம் நாம=வீர விரதம் என்பதுதான் தத்=அது அந்தஹ =மனத்தகத்தே ஸ்புரது=துடித்துக் கொண்டிருக்கட்டும். (ஸ்புரத்வக்ஷயா= ஸ்புரது + அக்ஷயா) அக்ஷயா = ஒரு போதும் குன்றாத த்யேயநிஷ்டா = லட்சியத்தினிடத்து உள்ள உறுதியானது தீவ்ரா=தீவிர வடிவத்தில் அனிசம்=இரவு பகல் இடைவிடாது ஹ்ருதந்தஹ (ஹ்ருத்+அந்த) = இதயத்தில் ப்ரஜாகர்து=விழிப்புடனிருக்கட்டும்.

விஜேத்ரீ = வெ.ற்றி பொருந்திய (வெற்றி முகமான) ச = அத்துடன், ந: = எங்களது, ஸம்ஹதா = ஒற்றுமையால திரண்ட, கார்யசக்தி: = காரிய சக்தியானது, அஸ்ய = இந்த தர்மஸ்ய = தர்மத்தை, ஸம்ரக்ஷணம் = பாதுகாக்கிற (வேலையை) விதாய = செய்வதுடன் (விதாயாஸ்ய = விதாய + அஸ்ய) ஏதத் = இந்த, ஸ்வராஷ்ட்ரம் = எங்களது ராஷ்டி-ரத்தை, பரம் வைபவம் = பரம உன்னத நிலைக்கு, நேதும் = கொண்டு செல்ல. தே = உனது ஆசிஷா = ஆசியால் ப்ருசம் = மிக்க, ஸமர்த்தா = திறம் பெற்றதாக, பவது = ஆகட்டும் (பவத்வாசிஷா = பவது + ஆசிஷா).

பாரத் மாதா கீ ஜய் = பாரத அன்னை வெல்க.

சுலோகங்களின்படி கருத்துரை

அன்பு காட்டும் தாய் நாடே! உன்னை நான் எப்பொழுதும் வணங்குகின்றேன். ஹிந்து பூமியே! நீயே என்னைச் சுகமாக ஊட்டி வளர்க்கின்றாய். மகா மங்கலமயமான புண்யபூமியே! உனது பணிக்கென எனது இவ்வுடல் அர்ப்பணமாகட்டும். உன்னை நான் பன்முறை வணங்குகின்றேன்.

சர்வ சக்தி வாய்ந்த இறைவனே! ஹிந்து ராஷ்ட்ரத்தின் அங்கங்களைப் போன்றுள்ள உறுப்பினர்களாகிய நாங்கள் உன்னைப் பணிவுடன் வணங்குகின்றோம், உனது பணிக்காகவே நாங்கள் கச்சையணிந்துள்ளோம். அது நிறைவேற எங்களுக்கு நல்லாசிகளை அருள்வாயாக. உலகத்தால் வெல்ல முடியாத சக்தியையும், உலகம் முழுவதும் தலை வணங்கி நிற்கக் கூடிய தூய ஒழுக்கத்தையும், அறிவு பூர்வமாக

ஆய்ந்து ஏற்ற இந்த எங்களது முள் நிறைந்த பாதையைக் கடப்பதற்கு எளிதாக ஆக்கக்கூடிய ஞானத்தையும் எங்களுக்கு அளிப்பாயாக.

இம்மையுடன் கூடிய மறுமையை எய்த ஒரே கருவி (வழி) வீர விரதம் என்பதாகும். அது எங்களது உள்ளத்தில் துடித்துக் கொண்டிருக்கட்டும். எங்களது இதயத்தில் குன்றாததும், தீவிரமானதுமான லட்சிய உறுதியானது எப்பொழுதும் விழிப்புடனிருக்கட்டும். வெற்றி பொருந்தியதும் ஒற்றுமையால் திரண்டதுமான எங்கள் காரியசக்தி ஸ்வதர்மத்தைக் காத்து எங்களது இந்த ராஷ்ட்ரத்தை மகோன்னத நிலைக்குக் கொண்டு செல்ல, உனது ஆசியால் மிக்க திறம் பெற்றதாக ஆகட்டும்.

வெல்க பாரத அன்னை!

பிரார்த்தனை பற்றி...

பிரார்த்தனையானது ஒரு விதத்தில் மந்திரமாகும்... இயந்திர கதியில் நாம் பிரார்த்தனையைச் சொன்னால் போதாது. அதன் சொற்களை உச்சரித்தால் மட்டும் போதாது. ஆனால் அச்சொல்லை உச்சரிக்கும்போதே நமது வாழ்க்கையை நல்வகையில் திருத்திக் கொள்ளும் இப்பெருங் கருத்தை, நாம் பூர்த்தி செய்ய ஏற்றிருக்கும் பெரும்பணிக்கு முற்றிலும் தகுதியுடையதாக அவ்வாழ்க்கையை ஆக்கிட வேண்டும் என்பதை, இப்பெரும் லட்சியத்தை, அதே சமயம் தட்டி எழுப்பிட வேண்டும். இந்த உறுதியோடுகூட நமது உள்ளத்தில் இப்புனித எண்ணத்தோடு கூட நாம் வார்த்தைகளை உச்சரிக்க வேண்டும். அப்போதுதான் இவை நம்மில் ஆழமாகப் பதியும். இவ்வாறு ஆழப்பதிந்தவற்றை எதுவுமே அழித்திட இயலாது. பணியிலே நமது இதயத்தை ஊன்றிட இது ஒரு வழியாகும். பணியைச் சீராக உணர்ந்து, நன்கு அதனை அறிந்து நமது இதயத்தை அதில் ஈடுபடுத்துவோம்.

— பரமபூஜனீய ஸ்ரீ குருஜி

ஸ்ரீ கேசவாஷ்டகம்

ஹிந்துர் விசால குணஸிந்துரபீஹ லோகே
பிந்தூயதே விகடிதோ ந கரோதி கிஞ்சித்
ஸத்ஸம்ஹதிம் கடயிதும் ஜனனம் யதீயம்
தம் கேசவம் முஹுரஹம் மனஸா ஸ்மராமி (1)

பவ்யம் வபு: ஸ்மிதமுதார முதக்ர மோஜ:
ஸ ஸ்நேஹ கத்கதவசோ மதுரம் ஹிதம்ச
வாத்ஸல்யபூர்ண மமலம் ஹ்ருதயம் யதீயம்
தம் கேசவம் முஹுரஹம் மனஸா ஸ்மராமி (2)

சங்கே கலௌ பவதி சக்திரிதி ப்ரஸித்தம்
ஜானாதி ஹிந்து ஜனதா நதுதத் கதஞ்சித்
ஸம்யக் வினேதுமிஹ தத் ஹுதவான் வபுர்ய:
தம் கேசவம் முஹுரஹம் மனஸா ஸ்மராமி (3)

க்ஷேத்ரம் நகிஞ்சிதிஹ நானுபயோகி கிஞ்சித்
ஸர்வம் ஹி ஸங்கடிதமத்ர பவேத் பலாய
இத்தம் ஜனம் வினயதி ஸ்ம நிரந்தரம் ய:
தம் கேசவம் முஹுரஹம் மனஸா ஸ்மராமி (4)

ஆர்ய க்ஷிதேரிஹ ஸமுத்தரணய தாஸ்யாத்
தாஸ்யாமி தேஹமிஹ ஸங்கடனும் விதாதும்
நிஷ்சித்ய பீஷ்மமசரத் ஸததம் வ்ரதம் ய:
தம்கேசவம் முஹுரஹம் மனஸா ஸ்மராமி (5)

யோ டாக்டரேதி பிஷஜாம் பதமாததானோ
விஞ்ஞாதவான் பரதபூமி ருஜாம் நிதானம்
ஸங்கௌஷதம் ஸமுதபாதி நவம் ச யேன
தம் கேசவம் முஹுரஹம் மனஸா ஸ்மராமி (6)

ஏகோ பஹு: கில பவேயமிதீச் வரேச்சா
ஸைவா பவத் ஸததமேவ பராயதந்த:
ஏகஷ்சயோ விஹிதவானிஹ ஸங்கஸர்கம்
தம் கேசவம் முஹுரஹம் மனஸா ஸ்மராமி (7)

ஐசம் ஹி கார்யமிதமித்யவகத்ய ஸம்யக்
ஸங்கக்ரதௌ க்ருதமிவார்பயதாயுராஜ்யம்
யோ ஜீர்ண தேஹமஜஹான் நவதாம் ஸமேதும்
தம் கேசவம் முஹுரஹம் மனஸா ஸ்மராமி (8)

அஷ்டகம் கேசவஸ்யேதம் ப்ராதர்நித்யம் படந்தியே
சங்ககார்யே ந காடின்யம் தேஷாம் பவதி கர்ஹிசித்

பொருள்

1. இவ்வுலகில் ஹிந்துக்கள் பரந்த குணக்கடலாக விளங்கினும் சிறு சிறு துளிகளாகிச் சிதறுண்டு கிடப்பதால் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். அவர்களை நன்கு பிணைத்து இணைப்பதற்காகப் பிறவியெடுத்த கேசவரை நான் எப்போதும் மனதால் தியானிக்கின்றேன்.

2. நல்ல உடற்கட்டு, புன்னகை தவழும் முகம், சிறப்பான வலிமை, உதாரகுணம், நட்பால் தழுதழுக்கும் குரல், இனிமையான இதமான பேச்சு, அன்பு நிறைந்த மாசுமரு வற்ற இதயம், இவையனைத்தும் வாய்க்கப்பெற்ற கேசவரை நான் எப்போதும் மனதால் தியானிக்கின்றேன்.

3. கலியுகத்தில் சங்கத்தின் மூலமே சக்தி என்பதை அனைவரும் அறிவர். ஆனால் ஹிந்து சமுதாயம் அதனை ஒரு சிறிதும் அறியவில்லை. ஹிந்து சமுதாயத்தை நன்கு இணைத்து

சக்தியுள்ளாதக்கத் தம் வாழ்வை அர்ப்பணித்த கேசவரை நான்எப்போதும் மனதால் தியானிக்கின்றேன்.

4. இவ்வுலகில் அற்பமானதோ, உபயோகமற்றதோ எதுவுமே இல்லை. பொருத்தமாக இணைத்துப் பிணைப்பதன் மூலம் எல்லாமே பயன்தரும். இதனை மக்களுக்கு எப்பொழுதும் நினைவுபடுத்திக் கொண்டிருந்த கேசவரை நான் எப்போதும் மனதால் தியானிக்கின்றேன்.

5. அடிமை நிலையிலிருந்து இப்புனித பூமியை உயர்த்துவதற்காக இந்த உடலையே அர்ப்பணித்து ஒற்றுமைச் சக்தியை உருவாக்குவேன் என்று பீஷ்மரைப் போன்று விரதம் பூண்டு எப்பொழுதும் உழைத்து வந்த கேசவரை நான் எப்போதும் மனதால் தியானிக்கின்றேன்.

6. டாக்டர் என்ற வைத்தியப் பட்டம் பெற்று பாரத பூமியின் நோயை சரியாகக் கண்டுபிடித்து சங்கம் என்றொரு

புதிய மருந்தை அளித்த கேசவரை நான் எப்போதும் மன தால் தியானிக்கின்றேன்.

7. ஒருவனுக உள்ள நானே பல வடிவங்களாக ஆவேன் என்று நினைத்தான் இறைவன். அவனே எங்கும் பரவினான். அதுபோலவே சங்கம் என்ற படைப்பை ஒருவராக இருந்து துவக்கிய கேசவரை நான் எப்போதும் மனதால் தியானிக் கின்றேன்.

8. இது இறைவனின் பணி என்று நன்கு உணர்ந்து சங்கம் என்ற யாகத்தில் தன் வாழ்வாகின்ற நெய்யை அர்ப் பணித்துப் புதியதொரு உடலைப் பெறுவதற்காக, நைந்து போன பழைய உடலைவிட்ட கேசவரை நான் எப்போதும் மனதால் தியானிக்கின்றேன்.

இந்த கேசவாஷ்டகத்தை காலையில் தினந்தோறும் படிக் கின்றவர்களுக்கு சங்கப் பணியில் ஒரு போதும் கஷ்டம் வராது.

போஜன மந்த்ரம்

யந்து நதயோ வர்ஷந்து பர்ஜன்யா:
ஸுபிப்பலா ஓஷதயோ பவந்து
அன்னவதா மோதனவதா மாமிக்ஷவதாம்
ஏஷாம் ராஜா பூயாஸம்

ஓதனமுத்ப்ருவதே பரமேஷ்டீவா ஏஷ: யதோதன:
பரமாமேவைனம் ச்ரியம் கமயதி

மாப்ராதா ப்ராதரன் த்விக்ஷன்
மாஸ்வஸார முதஸ்வஸா
ஸம் யஞ்ச ஸவ்ரதா பூத்வா
வாசம் வதத பத்ரயா

ப்ரம்மார்ப்பணம் ப்ரம்மஹவிர்
ப்ரம்மாக்னௌ ப்ரம்மணாஹுதம்
ப்ரம்மைவ தேன கந்தவ்யம்
ப்ரம்ம கர்ம ஸமாதினா

ஓம் ஸஹநாவவது
ஸஹநௌ புனக்து
ஸஹவீர்யம் கரவாவஹை
தேஜஸ்விநாவதீதமஸ்து
மாவித்விஷாவஹை
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

பொருள்

நதிகள் நீர் நிறைந்து பெருகட்டும். மேகங்கள் மழை பொழியட்டும். தாவரங்கள் பலன் தரட்டும். புல்லிலிருந்து தொடங்கி கோமளவல்லிக் கொடிவரை எல்லா மரங்களும், கொடிகளும் மலர்களையும் பழங்களையும் தரட்டும். தானிய வகைகள், பாலிலிருந்து வரும் பொருள்கள் (பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியன) ஆகியவை அடங்கிய ராஷ்ட்ரத்தினை ஆளுகிறவனாக நான் ஆவேன். இலையில் பரிமாறப் பட்டுள்ள சாதம் மிக உயர்ந்த அன்னவடிவமான ப்ரம்மா (கடவுள்) ஆகும். இதனைச் சாப்பிடுகிறவன் மிகச் சிறந்த செல்வத்தின் வடிவமான ''லக்ஷ்மி''யை அடைய முடியும்.

சகோதரன் தனது சகோதரனை வெறுக்காதிருக்கட்டும். சகோதரி தனது சகோதரியுடன் சண்டையிடாதிருக்கட்டும். அனைவரும் சரியான முறைப்படி (ஒற்றுமை) விரதம் ஏற்று பரஸ்பரம் நன்மை தரக்கூடிய சொற்களைப் பேசுவோம்.

அர்ப்பணம் செய்தல் பிரம்மம்; நெய் முதலிய ஹவிஸும் பிரம்மம்; பிரம்மமாகிற அக்னியில் பிரம்மத்தால் கொடுக்கப் படுகிறது; பிரம்மமாகிய கர்மத்தில் மனங் குவிந்துள்ளவனுல் பிரம்மமே அடையப்படுகிறது.

(குருசிஷ்யன் ஆகிய) நாம் இருவரும் ஒன்று சேர்ந்து பரஸ்பரம் காத்துக் கொள்வோம். நாமனைவரும் சேர்ந்து சாப்பிடுவோம் (நாட்டில் எவரும் பட்டினியாக இருக்கக் கூடாது). நாம் சேர்ந்திணைந்து வீரச் செயல்களைச் செய் வோம் (ராஷ்ட்ரத்தின் மீது அன்னிய ஆட்சி வந்தால் போரி டுவோம்). நமது நாட்டில் ஒற்றுமையை உருவாக்குகின்ற தவத்தினுல் நாம் ஒளிபடைத்தவர்களாவோம். நாம் படிப்ப வர்களாகவும் கற்பதில் நாட்டமுள்ளவர்களாகவும் ஆவோம். பரஸ்பரம் வெறுக்காதிருப்போம்.

ஓம் அமைதி! அமைதி!! அமைதி!!!

ஐக்ய மந்த்ரம்

1 யம் வைதிகா மந்த்ரத்ருச: புராணு
இந்த்ரம் யமம் மாதரிச்வானமாஹு:
வேதாந்திஞேSநிர்வசனீய மேகம்
யம் ப்ரம்மசப்தேன வினிர்திசந்தி

2 சைவா யமீசம் சிவ இத்யவோசன்
யம் வைஷ்ணவா விஷ்ணுரிதி ஸ்துவந்தி
புத்தஸ்ததா (அ)ர்ஹன்னிதி பௌத்த ஜைனு:
ஸத்ஸ்ரீ அகாலேதிச ஸிக்கஸந்த:

3 சாஸ்தேதி கேசித் கதிசித் குமார:
ஸ்வாமீதி மாதேதி பிதேதி பக்த்யா
யம் ப்ரார்த்தயந்தே ஜகதீசிதாரம்
ஸ ஏக ஏவ ப்ரபு ரத்விதீய:

பொழிப்புரை

தொன்மைக் காலத்து மந்திரங்களைக் கண்ட ரிஷிகள் அவரை இந்திரன், யமன், மாதரிச்வான் என்று அழைத்தனர். சொற்களால் வர்ணிக்க முடியாத அந்த ஒன்றை வேதாந்திகள் 'பிரம்மம்' என்ற சொல்லால் சுட்டிக்காட்டுகின்றனர்; சைவர்கள் அவரை சிவன் என்றும் வைணவர்கள் விஷ்ணு என்றும் துதிக்கின்றனர்; பௌத்தர்களும் ஜைனர்களும் அவரை புத்தர் என்றும் அர்ஹர் என்றும் அழைக்கின்றனர். ஸிக்க (சீக்கிய) அடியார்கள் சத்ஸ்ரீ அகால் என்று அழைக்கின்றனர்; உலக நாயகனாகிய அவரைச் சிலர் சாஸ்தா என்றும் முருகன் என்றும் விளிக்கின்றனர்; வேறு சிலர் எஜமானே, தந்தையே, தாயே என்று கூவியழைத்து பக்தியுடன் பிரார்த்தனை செய்கின்றனர்; இத்தகைய இறைவன் ஒருவரே தான்-இரண்டாவதாக எதுவுமில்லை. அதாவது அவர் இணையற்றவர் ஆவார்.

o o o



CHANAKYA PUBLICATIONS
F10/14, Model Town
Delhi-110009
Phone : 7111976